# DHEERAN IAS ACADEMY®

(Specialized Institute for UPSC, SSC, TNPSC, TNUSRB and Banking)
Raj Rathna Building, Lawley Road Bus Stop, Maruthamalai Main Road, Coimbatore -03
Cell: 81783 18007, 93379 97597 Email: dheeraniasacademy@gmail.com


# நடப்பு நிகழ்வுகள்
## மே 2023
## தமிழ்நாடு

- **தியாகிகளுக்கு அஞ்சலி**
    - 30.04.1930-ல் நாகை மாவட்டம், வேதாரண்யத்தில் ராஜாஜி தலைமையில் உப்புக்கு வரிவிதித்த ஆங்கிலேயருக்கு எதிராக உப்பு சத்தியாகிரக பேராட்டம் நடந்தது.
    - இதன் 93-ஆவது நினைவு நாளை முன்னிட்டு தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.
- **இன்னுயிர் காப்போம் திட்டம்**
    - இன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் 1.54 லட்சம் பேருக்கு அவரச சிகிச்சை அளிக்கப்பட்டள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை தெரிவித்துள்ளது.
    - இன்னும் காப்போம் திட்டம் – 18.12.2021

- மருத்துவ மாணவர்களின் மனநலன் காக்கும் சிறப்புத் திட்டம் மனம் திட்டம் தமிழக அரசால் 22.12.2022-ல் அறிமுகம் செய்யப்பட்டள்ளது
- மக்களைத் தேடி மேயர் திட்டம்
    - இன்று (03.05.2023) சென்னை ராயபுத்தில் மக்களைத் தேடி மேயர் திட்டம் சென்னை நகர மேயர் ப்ரியா தொடங்கி வைக்கிறார்.

- **சிறுதானியம் வழங்கும் திட்டம்**
    - தமிழக நியாவிலைக்கடைகளில் சிறுதானியம் வழங்கும் திட்டத்தில் 2 கிலோ கேழ்வரகு வழங்கும் திட்டம் நீலகிரி மாவட்டம், உதகை பாலகொலா நியாய விலைக்கடை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

- **உலக பத்திரிக்கை சுதந்திர குறியீடு**
    - 180 நாடுகள் அடங்கிய உலக பத்திரிக்கை சுதந்திர குறியீட்டில் இந்தியா 161வது இடம் பிடித்துள்ளது.
    - முதல் 3 இடங்களை நார்வே, அயர்லாந்து, டென்மார்க் போன்ற நாடுகளும் கடைசி 3 இடங்களை வடகொரியா, சீனா வியட்நாம் போன்ற நாடுகளும் பிடித்துள்ளன.

- **திண்டிவனம் – புதிய பூங்கா அடிக்கல்**
    - விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் சிப்காட் வளாகத்தில் மருத்துவப் பொருள்கள் தயாரிப்புக்கான சர்வதேச தொழில் பூங்காவிற்கு தமிழக முதல்வர் அடிக்கல் நாட்டியுள்ளார்
    - ரூ.155 கோடி செலவில் 111 ஏக்கர் பரப்பில் இப்பூங்கா அமைய உள்ளது.

- **திருக்கோளூர் அகழாய்வு**
  - மத்திய தொல்லியல் துறை சார்பில் நடைபெற்ற திருக்கோளூர் அகாழாய்வில் (தூத்துக்குடி) மண்தளங்கள், செம்பு காசுகள், அடிப்பு, பாசிகள், சுடுமண் உருவகங்கள் உள்ளிட்ட சில பொருட்கள் கண்டுபிடிப்பு

- **தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளை:**
  - பெருநிறுவன பங்களிப்புடன் விளையாட்டுத் துறையை மேம்படுத்தும் விதமாக தமிழக அரசால் தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளை துவங்கப்பட்டுள்ளது.
  - இதற்கான விளம்பர தூதராக மகேந்திர சிங் தோனி நியமனம் செய்யப்பட்டுள்ளார்
  - முதலமைச்சர் கோப்பை போட்டி இலச்சினையாக வீரன் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
  - இந்த இலச்சினையின் தலை நீலகிரி வரையாடு போன்றும், மனித உடல் போன்று வெளியிடப்பட்டுள்ளது.

- **தூய்மை பணியாளர் நல வாரியம்**
  - தூய்மை பணிபுரிவோருக்கு கல்வி, பொருளாதார முன்னேற்றத்திற்காக தமிழக அரசு தூய்மை பணியாளர் நல வாரியம் அமைத்துள்ளது
  - இதன் தலைவராக ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜும் துணைத்தலைவராக கோயம்புத்தூர் கனிமொழி பத்மாநாபனும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்
  - 14 அலுவல் சார்ந்த உறுப்பினர்கள், 12 அலுவலர் சாரா உறுப்பினர்கள் இடம் பெற்றுள்ளனர்.

- **ஓபெக் கூட்டமைப்பு (OPEC):**
  - ஒபெக் கூட்டமைப்பிலிருந்து இந்தியா கச்சா எண்ணெய் இறக்குமதியை குறைத்துள்ளது
  - OPEC – Organization of the Petroleum Exporting Countries
  - ஆஸ்திரியாவியன் வியன்னாவை தலைமையகமாக கொண்ட OPEC கூட்டமைப்பு 1960 ஈரானின் பாக்தாத் நகரில் தொடங்கப்பட்டது.
  - இதன் உறுப்பு நாடுகளாக 13 நாடுகள் திகழ்கின்றன
  - இக்கூட்டமைப்பை நிறுவிய நாடுகள் சவுதி அரேபியா, ஈரான், ஈராக், குவைத், வெனிசூலா ஆகியவை ஆகும்.

- **தொல்பொருட்கள் கண்டெடுப்பு**
  - திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூர் அருகே துலுக்கர்பட்டியில் நடந்த 2ஆம் கட்ட அகழாய்வில் ஈமத்தாழிகள், ஈட்டி, மோதிரம் உள்ளிட்ட 450 தொல்பொருட்கள் கண்டெடுப்புபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன

- **ஏலகிரி மலை**
    - திருப்பத்தூர் மாவட்டம் ஏலகிரி மலையில் விஜயநகர பேரரசு கால இரு நடுகற்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன

- **இயற்கை உரம் விற்பனை**
    - மே 12-ல் தமிழக முதல்வரால் செழிப்பு என்ற பெயரில் இயற்கை உர விற்பனை தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.
    - நகர்ப்புறம் சேகரிக்கப்படும் மக்கும் குப்பைகள் நுண்ணுரக்கிடங்குகளில் இயற்கை உரமாக மாற்றப்பட்டு விற்பனைக்கு வருகிறது.

- **வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள்**
    - மே 16-ல் வள்ளலார் 200வது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு கால்நடைகளுக்கு உணவு மற்றும் மருத்துவ சேவைக்காக வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள் திட்டம் தொடங்கப்பட்டள்ளது.

- **பொருநை அருங்காட்சியகம்**
    - மே 18-ல் தமிழக முதல்வரால் பொருநை (தாமிரபரணி) ஆற்றங்கரையின் பெருமையை வெளிப்படுத்தும் பொருநை அருங்காட்சியகத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.
    - ரூ.33.02 கோடி செலவில் 13.02 ஏக்கர் பரப்பில் 55,000 ச.அடிக்கு பாளையங்கோட்டை, குலவணிகர்புரம், மேலப்பாளையம், ரெட்டியார்பட்டி மலைப்பகுதிகளில் அமைய உள்ளது
    - இதில் கொற்கை, சிவகளை, ஆதிச்சநல்லூர், நிர்வாக கட்டிடம் போன்றவையும் அமைக்கப்பட உள்ளது.

- **அறநிலையத்துறை – செயலி அறிமுகம்**
    - மே 18-ல் தமிழக அறநிலையத்துறையால் இல்லம் தேடி பிரசாதம், திருக்கோயில் செயலிகளை அறிமுகம் செய்துள்ளது
    - இல்லம் தேடி பிரசாதம் – செயலி
    - 48 முதுநிலை திருக்கோயில்களின் பிரசாதங்களை இல்லங்களுக்கு அஞ்சல் துறையுடன் இணைந்து அனுப்பி வைக்க செயல்படுத்தப்பட்டுள்ளது.

- சென்னையின் தரமணியில் நடைபெற்ற **காசநோய் ஒழிப்பு மாநாட்டை** தமிழக சுகாதாரத்துறை நல அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்துள்ளார்.
    - மேலும் காசநோய்க்கு மருந்தான 3 ஹெச்பி மருந்தினை அறிமுகம் செய்து வைத்துள்ளார்
    - 2025-ம் ஆண்டுக்குள் "காசநோய் இல்லா தமிழ்நாடு" என்ற நிலை எட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

- **அண்ணல் அம்பேத்கர் திட்டம்**
    - தமிழகத்தில் அண்ணல் அம்பேத்கர் திட்டம் சிறு குறு, மற்றும் நடுத்த நிறுவனங்கள் துறை மூலம் செயல்படுத்தப்படுகிறது

- இத்திட்டத்தின் மூலம் SC, ST தொழில் முனைவோருக்கு கடனுதவியுடன் கூடிய மானியம் வழங்கப்படுகிறது.

**ஏரியா சபை கூட்டம்**

- கிராமங்களில் நடத்தப்படும் கிராம சபை கூட்டங்கள் போல நகர்புற உள்ளாட்சிகளில் ஏரியா சபை கூட்டம் ஆண்டுக்கு 4 முறை நடத்த உத்தரவு தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.
- ஏரியா சபை கூட்டங்கள் நடத்தப்படும் நாட்கள்
- ஜனவரி 25 – தேசிய வாக்காளர் தினம்
- ஏப்ரல் 14 – அம்பேத்கர் பிறந்த தினம்
- செப்டம்பர் 15 – அண்ணா பிறந்த தினம்
- டிசம்பர் 10 – சர்வதேச மனித உரிமைகள் தினம்.

**சென்னை உயர்நீதிமன்றம்**

- சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்னாள் பொறுப்பு தலைமை நீதிபதி டி.ராஜா ஓய்வு பெற்றதால் புதிய பொறுப்பு தலைமை நீதிபதியாக எஸ்.வைத்தியநாதன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- கூடுதல் செய்திகள்
- சென்னை உயர்நீதிமன்றத்திற்கு கூடுதலாக 4 நீதிபதிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளதன் மூலம் நீதிபதிகள் எண்ணிக்கை 64-ஆக உயர்ந்துள்ளது.

**தமிழக செங்கோல்**

- புதிய நாடாளுமன்றத்தில் தமிழகத்தின் புனித செங்கோல் நிறுவப்படுமென மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தெரிவித்துள்ளார்
- 1947-ல் ஆங்கிலேயர்களிடமிருந்து இந்தியாவுக்கு அதிகாரப் பரிமாற்றம் நடந்ததை அடையாளப்படுத்தும் விதமாக தமிழக செங்கோல் ஜவஹர்லால் நேருவிடம் வழங்கப்பட்டது.
- இச்செங்கோல் தமிழகத்தின் திருவாவடுதுறை ஆதினம் உதவியால் உருவாக்கப்பட்டது.
- தற்போது உத்திரபிரதேசம், பிரயாக்ராஜ் (அலாகாபாத்) நேரு அருங்காட்சியகத்தில் உள்ளது.

**சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி**

- மும்பை உயர்நீதிமன்ற நீதிபதியாக பணிபுரிந்த சஞ்சய் விஜய்குமார் கங்காபுர்வாலா சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- சென்னை உயர்நீதிமன்றத்தின் 52வது தலைமை நீதிபதி பதவியேற்க உள்ளார்.

# இந்தியா

- **குஜராத் & மகாராஷ்டிரா மாநிலங்கள் தினம்**
  - குஜராத் மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்கள் **1960 மே 1**-ல் உருவாக்கப்பட்டுள்ளது.
  - **ஒரே பாரதம் உன்னத பாரதம்** முன்னெடுப்பின் கீழ் முதல் முறையாக பல்வேறு ஆளுநர் மகாராஷ்டிரம் மற்றும் குஜராத் மாநிலங்கள் உருவான தினம் கொண்டாட்டம்
  - **சர்தார் வல்லபாய் படேல் பிறந்த தினத்தை** முன்னிட்டு 31.10.2015-ல் ஒரே பாரதம் உன்னத பாரதம் முன்னெடுப்பு என்ற திட்டத்தை மோடி முன்னெடுத்துள்ளார்.
  - **மொழிவாரி மாநிலம்** 1956-ல் 7வது சட்டத்திருத்தத்தின்படி உருவாக்கப்பட்டது.

- **பொருளாதார சுதந்திர குறியீடு.**
  - அமெரிக்காவின் தி ஹெரிடேஜ் பவுண்டேசன் சிந்தனைக்குழு வெளியிட்டுள்ள பொருளாதார சுதந்திர குறியீட்டில் 131வது இடத்தை இந்தியா பிடித்துள்ளது
  - முதலிடம் சிங்கப்பூரும் அடுத்தடுத்த இடங்கள் முறையே சுவிட்சர்லாந்து, அயர்லாந்து போன்ற நாடுகள் பிடித்துள்ளன
  - கடைசி இடங்கள் முறையே வடகெரியா, வெனிசுலா, கியூபா நாடுகள் முறையே பிடித்துள்ளன.
  - உலகபத்திரிகை சுதந்திர குறியீட்டில் இந்தியா 161வது இடம் பிடித்துள்ளது.

- **முதல் சிறுதானியங்கள் அனுபவ மையம்**
  - இந்தியாவின் முதல் சிறுதானியங்கள் அனுபவ மையம் (MEC) புது டெல்லியில் திறக்கப்பட்டுள்ளது
  - MEC- Millets Experience Centre

- **ராஜஸ்தான் – புதிய வனவிலங்கு காப்பகங்கள்**
  - அழியும் அரிய வனவிலங்களை பாதுகாக்க ராஜஸ்தான் மாநில அரசு 3 இடங்களை வனவிலங்கு காப்பகமாக அறிவித்தள்ளது.
  - ராஜஸ்தானில் வனவிலங்கு காப்பகங்கள் எண்ணிக்கை 26-க உயர உள்ளது
  - பாரனிலிலுள்ள சோர்சான் – கான மயில்கள் காப்பகம்
  - ஜோத்பூரிலுள்ள சிக்சான் – நெட்டைக் கொக்குகள் காப்பகம் – இந்தியான் முதல் நெட்டைக்கொக்கு காப்பகமாக அமைகிறது
  - பில்வாராவிலுள்ள ஹமிர்கர் காப்பகங்கள்

- **உலக பாரம்பரிய சின்னம் பரிந்துரை**
  - மேற்கு வங்காளம், பிர்பூம் மாவட்டத்திலுள்ள சாந்திநிகேதன் யுனஸ்கோ உலகப் பாரம்பரிய பட்டியலுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது
  - தேவேந்திரநாத் தாகூரால்  உருவாக்கப்பட்டது.

- இங்கு 1921-ல் ரவீந்திரநாத் தாகூர் விஸ்வபாரதி பல்கலைகழகத்தினை உருவாக்கினார்
- UNESCO – United Nations Educational, Scientific and Cultural Organization
- தலைமையிடம் – பாரிஸ், பிரான்ஸ்
- அமைக்கப்பட்ட ஆண்டு – 16.11.1945.

**ஹரித் சாகர் திட்டம்**

- மே 10-ல் இந்தியாவிலுள்ள துறைமுகங்களை பசுமைத் துறைமுகமாக மாற்றும் திட்டம் திட்டமான ஹரித் சாகர் திட்டத்தை அமைச்சர் சர்வானந்தா சோனோவால் (துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழித்துறை அமைச்சர்) தொடங்கி வைத்தார்
- 2022-23 நிதியாண்டின் ஒட்டுமொத்த செயல் திறன் சிறப்பு விருது சென்னை துறைமுகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது

**இணைய வழி மனுதாக்கல் – புதியவடிவம்**

- 7 நாட்கள், 24 மணி நேரம் செயல்படும் நீதிமன்றங்களில் இணையவழியில் மனுதாக்கல் முறையான இ-ஃபைலிங் 2.0 திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
- இத்திட்டதினை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசூட் தொடங்கி வைத்தார்.

**வல்ல நாடு மலைப்பகுதி – புதிய பல்லி இனம்**

- மகாராஷ்டிரா மாநிலத்தின் **தாக்கரே வனவிலங்கு அறக்கட்டளை** தூத்துக்குடி மாவட்டம் வல்ல நாடு மலைப்பகுதியில் நடத்திய ஆய்வில் **ஹெமிடாக்டைலஸ் குவார்ட்சிடிகோல்** எனும் புதிய வகை பல்லி இனத்தை கண்டறிந்துள்ளது
- வறண்ட பகுதியில் வாழும் இவ்வினத்திற்கு முத்து செதில் பல்லி என பெயர் சூட்டப்பட்டள்ளது.

**சஞ்சய் கார்க் குழு (ICAR)**

- சய்சய்கார்க் என்பவரின தலைமையில் 11 பேர் கொண்ட உயர்மட்டக்குழு இந்திய வேளாண் ஆராய்ச்சி சபையினை மறு சீரமைக்க உருவாக்கப்பட்டுள்ளது.
- Indian Council of Agricultural Research – 1929

**சஞ்சய்கார் சாத்தி**

- சஞ்சய்கார் சாத்தி என்ற பெயரில் காணாமல் போன மற்றும் திருட்டுப் போன கைப்பேசிகளை கண்டறியும் இணைய தளம் மத்திய அரசால் தொடங்கப்பட்டது.

**ரயில் மதாத் செயலி**

- ரயில்வேயில் புகார்களை தெரிவிக்க ரயில் மதாத் செயலி 29.08.2021-ல் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
- கடந்த நிதியாண்டான 2021-22-ல் 31,450 புகார்கள் பெறப்பட்டுள்ளன.

- **ஆபரேசன் கருணா**
  - மேக்கா புயல் பாதிக்கப்பட்ட மியான்மர் நாட்டிற்கு உதவும் திட்டத்திற்கு ஆபரேசன் கருணா என பெயரிடப்பட்டுள்ளது
    - ஆபரேஷன் கங்கா – உக்ரைனிலிருந்து இந்தியகளை மீட்க
    - ஆபரேஷன் காவேரி – சூடான் இந்தியர்களை மீட்க
    - ஆபரேஷன் தோஸ்த் – துருக்கி மற்றும் சிரியா நிலநடுக்கத்தில் இந்தியா உதவும் திட்டம்

- **இந்தியா பொருளாதாரம் – ஐ.நா. அறிக்கை**
    - 2024-ல் இந்திய பொருளாதாரம் 6.7%மாகவும் உலகபொருளாதாரம் – 2.5%மாகவும் உயரும் என ஐ.நா. சபை தெரிவித்துள்ளது.

- **மீண்டும் சிவிங்கி புலிகள் திட்டம்**
  - மீண்டும் சிவிங்கிபுலிகள் திட்டத்தினை கண்காணிக்க உலகப் புலிகள் கூட்டமைப்பு தலைமைச் செயலாளர் ராஜேஷ் கோபால் தலைமையில் 11 பேர் அடங்கி குழுவை மத்திய அரசு நியமனம் செய்துள்ளது.

- **மனோஜ் சோனி**
  - மனோஜ் சோனி மத்திய குடிமைப் பணிகள் ஆணைய தலைவராக (UPSC) நியமிக்கப்பட்டுள்ளார்
  - 1926-ல் தொடங்கப்பட்ட மத்திய குடிமைப் பணிகள் ஆணையத்தின் தலைமையகம் புதுதில்லியில் அமைந்துள்ளது
  - சிபிஐ இயக்குநராக பிரவீண் சூட் பதவியேற்றுள்ளார்
  - ஆர் தினேஷ் இந்திய தொழிற் கூட்டமைப்பு (CII) புதிய தலைவராக பதவியேற்பு.

- **முழு மின் ஆளுமை மாநிலம்**
  - கேரளா இந்தியாவின் முதல் முழு மின் ஆளுமை மாநிலம் மாறியுள்ளது.
  - அரசின் சேவைகள் உடனடியாக மக்களை சென்றடைய கேரளா முழுவதும் டிஜிட்டல் மயமாக்கப்பட்டு மின் ஆளுமை மாநிலமாக மாற்றப்பட்டுள்ளது.
  - இந்தியாவின் முதல் டிஜிட்டல் பல்கலைக்கழகம் கேரளாவில் அமைக்கப்பட உள்ளது.

- **நேட்டோ பிளஸ் கூட்டமைப்பு (NATO Plus)**
  - நேட்டா பிளஸ் கூட்டமைப்பில் இந்தியாவினை சேர்க்க அமெரிக்கா நாடாளுமன்ற குழு பரிந்துரை செய்துள்ளது.
  - 1949-ல் தொடங்கப்பட்ட நேட்டோ அமைப்பு (வடக்கு அத்திலாந்திய ஒப்பந்த அமைப்பு) 31 உறுப்பு நாடுகளை கொண்டுள்ளது
  - NATO – North Atlantic Treaty Organisation.

- **புதிய நாடாளுமன்றம்**
  - மே 28-ல் பிரதமர் நரேந்திர மோடியால் புதிய நாடாளுமன்றம் கட்டம் திறந்து வைக்கப்பட்டுள்ளது

- 64,500 ச.மீ. பரப்புடன் 4 அடுக்குகளாக அமைந்துள்ளது.
- தேசிய பறவை மயிலின் கருத்துரு அடிப்படையில் மக்களவை 888 இருக்கைகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.
- தேசிய மலரான தாமரையின் கருத்துரு அடிப்படையில் மாநிலங்களவை 384 இருக்கைகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.
- மேலும் சிறப்பு தபால் தலையும், 75 ரூபாய் நாணயமும் வெளியிடப்பட்டுள்ளது.

**5வது உலக ஆயுர்வேத திருவிழா**

- டிசம்பர்-2023-ல் திருவனந்தபுரத்தில் 5வது உலக ஆயுர்வேத திருவிழா Emerging Challengers in Healthcare & A Resurgent Ayurveda என்ற கருப்பொருளுடன் நடைபெற உள்ளது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

**R21/Matrix-M மலேரியா தடுப்பூசி**

- **ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் மற்றும் சீரம்** தயாரிப்பில் 75% செயல்திறனுடைய **R21/Matrix-M** எனும் மலேரியா தடுப்பு மருந்திற்கு **கானா** ஒப்புதல் அளிந்துள்ளது
- R21/Matrix-M மருந்துக்கு ஒப்புதல் அளித்த உலகின் முதல் நாடு – கானா

**லிகோ வானியல் ஆய்வு மையம்**

- மகாராஷ்டிரா, ஹிங்கோலி மாவட்டத்தில் வானில் உருவாகும் புவிஈரப்பு அலைகளை கண்டறிய ரூ.2600 கோடி செலவில் லிகோ இந்திய வானியல் ஆய்வகம் உருவாக்க உள்ளது.
- 2030 முதல் செயல்பட உள்ளது
- இது உலகின் 3வது லிகோ வானியல் ஆய்வு மையம்
- அமெரிக்காவில் ஹான்போர்டு, லிவிங்டன் போன்ற இடங்களில் அமைந்துள்ளன.
- LIGO – Laser Interferometer Gravitational-wave observatory

**பிரமோஸ் சூப்பர் சோனிக் ஏவுகணை சோதனை வெற்றி**

- இந்திய கடற்படையால் ஐஎன்எஸ் மர்மகோவா போர்கப்பலில் வைத்து சோதிக்கப்பட்ட பிரமோஸ் சூப்பர் சோனிக் ஏவுகணை சோதனை வெற்றி
- இவ் ஏவுகணை இந்தியா மற்றும் ரஷ்யா கூட்டு தயாரிப்பில் உள் நாட்டிலே உருவாக்கப்பட்டுள்ளது.
- ஒலியின் வேகத்தை விட 2.8மடங்கு அதிகமாக பாயும் திறன் கொண்டது.
- நீர்மூழ்கிகப்பல், போர்க்கப்பல், போர் விமானங்கள், நிலப்பகுதியில் வைத்து ஏவும் தன்மையுடையது.

**சனி – துணைக்கோள்**

- சனிக்கோளை சுற்றிவரும் புதிய 62 துணைக்கோள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன
- சனிக்கோளை 62 துணைக்கோளுடன் மொத்த 145 துணைக் கோள்களாக உயர்ந்துள்ளது

- சூரியகுடும்பத்தில் அதிக துணைகோள் கொண்ட கோளாக உருவெடுத்துள்ளது.
- சூரியகுடும்பத்தில் அதிக துணைகோள் கொண்ட இரண்டாவது கோள் – வியாழன் (95 துணைக்கோள்)

**இன்சாட் 3டிஎஸ் செயற்கைக்கோள்**

- காலநிலை மாற்றம் தொடர்பாக ஆய்வு செய்யும் செயற்கைக்கோளான இன்சாட் 3டிஎஸ் செயற்கைக்கோள் ஜிஎஸ்எல்வி ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்த இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.
- ISRO – Indian Space Reaserachi Organisationg
- தலைமையம்- பெங்களூர்
- தொடங்கப்பட்ட நாள் : 15.08.1969
- தொடங்கியவர் – விக்ரம் சாராபாய்
- இஸ்ரோ தலைவர் (2023) – எஸ்.சோம்நாத்

**சீனா**

- சீனாவால் 2030-க்குள் நிலவுக்கு மனிதர்களை அனுப்பட உள்ளது.
- நிலவுக்கு மனிதர்களை அனுப்ப உள்ள இரண்டாவது நாடாக சீனா திகழ உள்ளது.
- நிலவுக்கு மனிதர்களை முதலில் அனுப்பிய நாடு – அமெரிக்கா (1968)

## வெளிநாட்டு நிகழ்வுகள்

**ஆசிய வளர்ச்சி வங்கி**

- ஆசிய வளர்ச்சி வங்கியின் 56வது ஆண்டுகூட்டம் தென்கொரியாவில் நடைபெற்றது
- நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் இந்தியா சார்பில் பங்கேற்றுள்ளார்.
- ஆசிய வளர்ச்சி வங்கியின் தலைமையகம் பிலிப்பைன்ஸ் உள்ளது
- 1966-ல் தொடங்கப்பட்டது

**ஓட்டுநர் இல்லாத பேருந்து**

- ஸ்காட்லாந்தில் உலகின் முதல் ஓட்டுநர் இல்லா பேருந்து துவங்கப்பட்டுள்ளது
- சென்சார் முறையில் இயங்கும் இப்பேருந்து மணிக்கு 50கிமீ வேகத்தில் செல்கிறது.

**கூட்டு இராணுவப் போர் பயிற்சி**

- இந்தோனிசியாசியாவில் இந்தியா மற்றும் இந்தோனேசியா கடற்படை கூட்டு இராணுவப் போர் பயிற்சி சமுத்திர சக்தி 2023 என்னும் பெயரில் நடத்தப்பட்டுள்ளது
- இப்பயிற்சியல் ஐஎன்எஸ் கப்பலான சுவராட்டி பங்கேற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

மே **19-21** வரை ஜப்பானின் ஹிரோஷிமாவில் ஜி**7** உச்சி மாநாடு நடைபெறுகிறது

- கனடா, பிரான்ஸ், ஜெர்மெனி, இத்தாலி, இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகள் இதன் உறுப்பு நாடுகளாக உள்ளன.

- **நியூ-எரா திட்டம்**
  - சீனாவில் குறைந்து வரும் மக்கள் தொகையை உயர்த்துவதற்காக நியூ-எரா திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது
  - இதில் **7** குழந்தைகள் பெற்றால் சமூக ஆதரவாக **1,50,000** டாலர் அளிக்கபடுகிறது.
  - இளம் பெண்களுக்கு காதல் விடுமுறை, திருமண உதவித் தொகை, மூன்றாவது குழந்தைகளுக்கு உதவித்தொகை

**விருதுகள்**

- **டாக்டர் அம்பேத்கர் விருது**
  - மகாராஷ்டிராவின் புத்தாஞ்சலி ஆராய்ச்சி அறக்கட்டளை சார்பில் அச்சமில்லா உத்திரபிரதேசத்தை உருவாக்கியதற்காக உத்திரபிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத்திற்கு **13**வது டாக்டர் அம்பேத்கர் விருது வழங்கப்பட்டுள்ளது.
- **செவாலியே விருது**
  - தமிழகத்தை சேர்ந்த டாடா குழுமத்தலைவரான என்.சந்திரசேகரனுக்கு பிரான்ஸ் நாட்டின் உயரிய விருதான செவாலியே விருது வழங்கப்பட்டுள்ளது
  - இந்தியா – பிரான்ஸ் இடையேயான வர்த்தக உறவை வலப்படுத்துவதில் முக்கிய பங்காற்றியதற்காக வழங்கப்பட்டுள்ளது.
  - **1957** முதல் இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது.
- 57**வது ஞான பீட விருது – 2021**
  - இந்தியாவின் மிக உயர்ந்த இலக்கிய விருதான ஞான பீட விருதினை தாமேதர் மௌசோ பெற்றுள்ளார்
  - இவ்விருதினை பெறும் **2**வது நபராக உள்ளார்
  - **1983**-ல் கார்மெலின் நாவலுக்காக சாகித்திய அகாடமி விருது பெற்றுள்ளார்.

**முக்கிய தினங்கள்**

- **உலக தொழிலாளர் தினம்** (**World Labour Dar) May – 01**

- **தேசிய தொழில் நுட்ப தினம் (**National Technology Day) – May **11**
  - **கருப்பொருள் –** Integrated Approach in Science and Technology for Sustainable future.
  - 1998 பொக்ரைன் அணு குண்டு சோதனையை நினைவு படுத்தும் விதமாக
- உலக எய்ட்ஸ் தடுப்பூசி தினம் (**World Aids** Vaccine Day) – May 18

**விளையாட்டு நிகழ்வு**

- **ஈட்டி எறிதல் தரவரிசை பட்டியல்**
  - உலக தடகள அமைப்பு வெளியீட்டுள்ள தரவரிசை பட்டியிலில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா 1455 புள்ளிகள் பெற்று முதலிடம் பிடித்துள்ளார்
  - உலகதர வரிசை பட்டியலில் முதல் இடம் பிடித்த முதல் இந்தியர் வீரர்

என்ற பெருமையை பெற்றுள்ளார்.

- 2வது, இடத்தை ஆண்டர்சன் பீட்டரும் 3வது இடத்தை ஜேக்கப் வட்லெஜரும் பிடித்துள்ளனர்.

- **கேலா இந்தியா 2023**
    - கேலா இந்தியா 2023 போட்டிகள் தமிழ்நாட்டில் நடைபெற உள்ளது.